ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2148/53 - 2019 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2019.11.08
*2148/53 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2129/95 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரித்தான அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிழைதிருத்தம் தொடர்பானது**

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், இல. 2129/95 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரித்தான விசேட வர்த்தமானப் பத்திரிகையின் 07-4554/9 ஆம் இலக்கத்திற்குரித்தான அறிவித்தலானது இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.*

*அந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள "அநுராதபுரம் மாநகர சபை" பதத்தினைத் தொடர்ந்து "**மத்திய நுவரகம பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபை (பகுதி)**" என்ற வகையில் அமையுமிடத்து அந்த அதி விசேட வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள "நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க சட்டம் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின்" என்பதற்கு மாறாக "நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின்" என்ற வகையில் அமையுமிடத்து, கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.*

**"அநுராதபுரம் மாநகர சபை, மத்திய நுவரகம் பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் (பகுதி) அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய அநுராதபுரம் நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்"**

*நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தின் உப பிரிவு 8F இன் பிரகாரம் உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்த சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட "அநுராதபுரம் மாநகர சபை, மத்திய நுவரகம் பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் (பகுதி) அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய அனுராதபுரம் நகர அபிவிருத்திப் பிரதேசத்தின் அநுராதபுர மாநகர சபை அபிவிருத்தித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு*

1 A - G 31435 - 19 (2019/11)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதி வழங்கினேன் என்பதனை, சட்டத்தின் உப பிரிவு 8 (G) இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும்
மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹூறுபாய",
சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 07.

மேலும் அந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள "அநுராதபுரம் மாநகர சபை" என்பதற்கு மாறாக "மத்திய நுவரகம பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபை (பகுதி) அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய அநுராதபுரம் நகர அபிவிருத்திப் பிரதேசம்" என்ற வகையில் அமையுமிடத்து, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது "**மத்திய நுவரகம பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் (பகுதி)** அறிவிக்கப்பட்ட அநுராதபுர அபிவிருத்திப் பிரதேசத்திற்காக 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, சட்டத்தின் 8A ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டமானது" என்ற வகையில் கீழ் வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

"**அநுராதபுரம் மாநகர சபை, மத்திய நுவரகம் பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் (பகுதி) அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய அநுராதபுரம் நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்.**"

"அநுராதபுரம் நகர சபையின் அறிவிக்கப்பட்ட நகர அபிவிருத்தி பிரதேசத்திற்காக, 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தினால் (திருத்தப்பட்ட) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, சட்டத்தின் 8A ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட அநுராதபுரம் மாநகர சபை, மத்திய நுவரகம் பிரதேச சபை (பகுதி) மற்றும் கிழக்கு நுவரகம பிரதேச சபையின் (பகுதி) அறிவிக்கப்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கிய அநுராதபுரம் நகர அபிவிருத்தி பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கு பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்ட சட்டப்பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை, பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்."

கலாநிதி ஜகத் முனசிங்க,
தலைவர்,
நகர அபிவிருத்தி அதிகாரசபை.

2019, நவெம்பர் 07.

இல. 2129/95 மற்றும் 2019.06.28 ஆந் திகதிக்குரிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் 07-4554/9 ஆம் இலக்கத்திற்கமைவான அறிவித்தலின், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிழைத்திருத்தங்கள் யாவும் 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும்
மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹூறுபாய",
சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, நவெம்பர் 07.

11 - 1485

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.